குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.95/2019

அ.சா. 2

2024–ம் ஆண்டு மே 10–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி –02 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | ஜாதி | |
| தந்தை பெயர் | காளியப்பன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.21 மணி,

Accused A2. Ramasamy present. A1. Kaliyamoorthy absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. Advocate Mr. R.Kannan present for Accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சமுத்திரத்தில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். சம்பவ நடந்த காலத்தில் தாரமங்கலம் நெல்லிகுப்பம் தெருவில் குடியிருந்தேன். அ.சா.1 எனது மனைவி. கடந்த 18.08.2018 ம் தேதி நான் வேலைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்து மாலை எனது பெற்றோரை பார்ப்பதற்காக எனது சொந்த ஊரான சமுத்திரத்திற்கு சென்றுவிட்டேன். இரவு அங்கேயே தங்கி விட்டேன்.

2. 19.08.2018 ம் தேதி அதிகாலை 01.00 மணியளவில் எனது மனைவி எனக்கு போன் செய்து அவரது செயினை பறித்து கொண்டு சென்றுவிட்டதாக அழுதுகொண்டே சொன்னார். நான் புறப்பட்டு வீட்டுக்கு வந்தேன். அருகில் இருந்தவர்களும் வந்து பார்த்தார்கள். இரவு வீட்டுக்கதவை யாரோ தட்டியதாக என் மனைவி கதவை திறந்து பார்த்த போது அவரது கழுத்தி அணிந்திருந்த 5 பவுன் நகையை ஒரு நபர் பறித்து கொண்டு சென்றுவிட்டதாக என் மனைவி சொன்னார்.

3. சம்பவம் நடந்த உடன் அருகில் இருந்தவர்கள் அக்கம் பக்கம் தேடி அந்த நபர்களை பார்த்துள்ளார்கள். பார்த்த போது அவர்கள் கிடைக்கவில்லை. காலை

விடிந்தவுடன் உறவினர்களுக்கு தகவல் கொடுத்தேன். அதன்பின்பு 20.08.2018 ம் தேதி காலை இது சம்பந்தமாக நானும் எனது மனைவியும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். 01.10.2018 ம் தேதி காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து திருடனை கடலூர் பக்கம் இருந்து பிடித்துவிட்டதாகவும் நகை கிடைத்துவிட்டதாகவும் சொன்னார்கள்.

4. காவல் நிலையத்திற்கு நானும் எனது மனைவியும் சென்றோம். எனது மனைவி அந்த நபரையும் செயினையும் அடையாளம் காட்டினார். பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து எனது மனைவி நகையை பெற்றுக் கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

5. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 01.29 மணி,

ஓம்/– எஸ்.ஷர்மிளா,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.